மாண்புமிகு திரு. அ. பெ. தருமலிங்கம்: உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அந்தப் பாலத்தை கட்டுவதற்கு அனுமதி அளிக்கப் பட்டு 1—3—1972ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பாலத்தைக் கட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில், இன்னும் அதிகமான ஆழத்தில் அஸ்திவாரம் போட வேண்டும் என்று, 34 முதல் 43 அடி வரை ஆழமான கிணறுகள் தோண்டப்பட்டு அந்த வேலைகள் துரிதமாக முடிக்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக் கிறது. இந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் முடித்து கொடுப்பதாக ஒப்பந்தக்காரர்கள் உறுதி அளித்து இருக்கிறார்கள். துரிதமான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Hand pulled rickshaws.

* 487—*Q*. THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether monetary compensation has been offered to persons surrendering their hand pulled rickshaws; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) அரசிடம் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு உரிமம் பெற்ற கை ரிக்ஷாவிற்கும் ரூ. 200 அதன் உரிமையாளருக்கு அளிக்கப்படுகிறது.

* 488. வினா: திரு. எஸ். கிட்டப்பா: திரு. என். கே. பழனிச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தமிழக முதலமைச்சர் நிதியிலிருந்து இதுவரை எத்தனை சைக்கிள் ரிக்ஷாக்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன? மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தமிழக முதலமைச்சர் கைரிக்ஷா இழுப்போர் நிவாரண நிதியிலிருந்து இதுவரை 768 சைக்கிள் ரிக்ஷாக்கள் இலவசமாக கீழ்க்கண்ட விவரப்படி வழங்கப்பட்டுள்ளன:—

சென்னை நகரம்	630
தென்னார்க்காடு (கடலூர்)	111
செங்கல்பட்டு (காஞ்சிபுரம்)	27
மொத்தம்	768

[1974 மார்ச் 18

திரு. என். டென்னீஸ் : மானிடரி காம்பன்செஷன் பெற்ற வயதானவர்கள் பலர் சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓட்ட முடியாத நிலையில் இருப்பதால் அவர்கள் "ஆல்டர்நேட் ஜாப்ஸ்" இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஆல்ட்ர்நேட் ஜாப்ஸ் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை வகுத்து அரசாங்கம் செயல்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கை ரிக்ஷாக்களுக்கு நஷ்டஈடு என்ற முறையில் ரூ. 200 தரப்படுகிறது. கைரிக்ஷாக்களை வைத்துக் கொள்ளக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, அவர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கவேண்டுமென்ற திட்டம் இதில் அடங்கவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது பெருவாரியான கைரிக்ஷாக்கள் பூராவும் தனிப்பட்டவர்களுடையது. சைக்கிள் ரிக்ஷாக்கள் கொடுக்கும் போது நேரடியாக அந்த ரிக்ஷாக்கள் ஓட்டியவர்களுக்குக் கிடைக்காமல் யார், யார் அந்த கைரிக்ஷாக்களை வைத்திருந்தார்களோ, அவர்களுக்குத் தான் போய் சேர்ந்திருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே, அது எவ்வளவு தூரம் உண்மை ? அது உண்மையானால் அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய கருத்துக்கு இடமே இல்லை. கைரிக்ஷாக்கள் இழுப்பதற்கு லைசென்ஸ் வைத்திருந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. கைரிக்ஷாக்கள் வைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த உரிமையாளர்களுக்குக் கைரிக்ஷாக்களின் எண்ணிக்கையின்பேரில் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கான லைசென்ஸ் மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த லைசென்ஸை வைத்துக்கொண்டு சைக்கிள் ரிக்ஷாக்களை வைத்துக் கொண்டு தங்கள் வாழ்க்கையை அவர்கள் நடத்தி வருகிறார்கள். எனவே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சந்தேகத்திற்கு இடமேயில்லை.

திரு. கோவை செழியன் : கைரிக்ஷாக்கள் இழுப்பது மனிதத்தன்மை யற்றது என்ற முறையில், ஒரு மனிதனை உட்கார வைத்து இன்னொரு மனிதன் இழுப்பது கேவலம் என்றறிந்து அந்தமுறையை மாற்றுகிற வகையில் கைரிக்ஷாக்களை ஒழித்துவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த சைக்கிள் ரிக்ஷாக்களிலும் ஒருவரை உட்கார வைத்து இன்னொரு ஆள் கஷ்டப்பட்டு கொண்டு மிதித்து ஓட்டுவது என்பதும் மனிதத்தன்மையற்ற முறையாக இருப்பதால் தங்கள் அனுமதியோடு சொல்கிறேன்......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியையொட்டி விளக்கம் கேட்கலாமே தவிர யோசனைகள் சொல்லக்கூடாது.

திரு. கோவை செழியன் : "எக்கனாமிக் டைம்ஸ்"ல் Nagpur Entrepreneur என்ற நிறுவனம் சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்தக் கூடிய ஒரு மெஷினைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் விலை ரூ. 1,400 தான். கிரஸினில் ஓட்டக்கூடிய அந்த மெஷின் ஒரு லிட்டருக்கு

1974 மார்ச் 18]

இருபது கிலோமீட்டர்வரை ஓட்டலாம். ஆகவே அந்த மெஷினைகளை ஏராளமாக வாங்கி தமிழ்நாட்டிலுள்ள சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்தி இந்த மனிதத்தன்மையற்ற முறையைப் போக்குவதற்கு இந்த அரசு மனமுவந்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்தப் பத்திரிகைக் குறிப்பை நானும் பார்த்தேன். நாகபுரியில் பட்கிவார் என்ற ஒருவர் ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்து சைக்கிள் ரிக்ஷாக்களில் அதைப் பொருத்தினுல் சுலபமாக அதை இயங்க வைக்கலாம் என்ற அடிப்படையில் கண்டுபிடித்திருக்கிருர்கள். ஆனுல் அந்த இயந்திரம் இன்னும் உற்பத்தி செய்யப்படவில்லை. அந்த இயந்திரத்திற்கு ரூ. 1,400 செலவாகும் என்றும் அதை சைக்கிள் ரிக்ஷாவில் பொருத்தினுல் இருபது கிலோமீட்டர் வேகத்தில் சைக்கிள் ரிக்ஷா செல்லும் என்றும் ஒரு கிலோமீட்டருக்கு மூன்று காசுதான் செலவாகும் என்றும் ஸ்டார்ட் செய்வதற்கு மட்டும் பெட்ரோல் தேவை, ஓட்டுவதற்கு மண்ணெண்ணெய் போதும் என்றும் தெரிவித்திருக்கிருர்கள். மாதம் ஒன்றுக்கு அத்தகைய இரண்டாயிரம் இயந்திரங்களை உற்பத்தி செய்யவேண்டுமென்று, மேற்கு ஜெர்மனியிடத்திலிருந்து இயந்திரங்களுக்குக் காத்துக்கொண்டிருக்கிருர்களே தவிர வேறு அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த கைரிக்ஷாக்கள் ஒரு சிலவற்றை போலீஸ் கமிஷனர் அவர்களிடம் ஒப்படைத்திருக்கிருர்கள். அந்த ரிக்ஷாக்களை எல்லாம், அந்தக் குவியலையெல்லாம், டிஸ்போஸ் செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவைகளையெல்லாம் உடைத்து நொறுக்கப்பட்டு எலத்திற்கு விடவேண்டியதுதான்.

திருமதி த.ந. அனந்தநாயகி : இந்த கைரிக்ஷாக்களை ஒழிப்பதற்கு முன்னுல் மொத்தம் எவ்வளவு ரிக்ஷாக்கள் இருந்தன என்று கணக்கு எடுக்கப்பட்டது ? இப்போது உரிமையாளர்களுக்கு மட்டும் கைரிக்ஷாக்களை சைக்கள் ரிக்ஷாக்களாக மாற்றுவதற்கு வசதி செய்து கொடுக்காமல், கைரிக்ஷாக்களை ஒட்டிக்கொண்டிருந்தார்களே அவர்களுக்கும் அவர்கள் தேசீய வங்கிகள் மூலம் கடன் பெறமுடியும்—லைசென்ஸ் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எல்லா வகையான கணக்குகளும் எடுக்கப்பட்டு கைரிக்ஷாக்கள் இழுத்துப் பிழைத்தவர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா கொடுக்கப்பட்டிருக்கிறது. கை ரிக்ஷாக்கள் வைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவகளுக்கும் சைக்கிள் ரிக்ஷா அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோக வேறு யாருக்கும் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் சைக்கிள் ரிக்ஷா கொடுப்பதில்லை.

திரு. எம். தேவராசன் : இந்த சைக்கிள் ரிக்ஷாக்களை எளிதாக ஓட்டுவதற்கு ஏதாவது "ஸம் மெக்கானிக்கல் டிவைஸ்" செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். : அப்படிச் செய்ய முயற்சி செய்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

திரு. கே. என். குமாரசாமி : பாரம் வைத்து வண்டி இழுப்பது—மாட்டுக்குப் பதிலாக மனிதன் இழுத்துக்கொண்டிருக்கிறான்—என்பதற்குப் பதிலாக வேறு ஒரு திட்டத்தைப் புகுத்த அரசினிடம் ஏதாவது உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நம்மீது எவ்வளவோ பாரம் ஏற்றப்பட்டிருக்கிறது, படிப்படியாகத்தான் இவைகளுக்கெல்லாம் நாம் தீர்வு காணவேண்டும்.

திரு. நா. வீராசாமி : மனிதனை மனிதன் இழுக்கும் இந்தக் கொடுமையிலிருந்து—நம் முதல் அமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி அறிவிக்கப்பட்ட இத்திட்டத்திற்காக மொத்தம் எவ்வளவு செலவு செய்ய நம் அரசு முடிவு செய்திருக்கிறது ? எவ்வளவு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்க இருக்கிறோம் ? அதில் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு என்ன பங்கு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முதல் அமைச்சர் அவர்கள் நிதிக்கு ரூ. 25,82,340–79 காசு சேர்ந்தது. கைரிக்ஷாக்களைப் பொறுத்த வரையில் நல்லவேளையாக வட ஆர்க்காடு மாவட்டம் அந்த நிலைமையில் இல்லை. தமிழகத்திலே சென்னை, செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டம் இந்த மூன்று பகுதிகளில்தான் கைரிக்ஷாக்கள் இழுத்துத்தான் பிழைக்க வேண்டும் என்ற நிலையில் இருந்து கொண்டிருந்தார்கள். ஆகவே, வட ஆர்க்காடு மாவட்டம் தப்பித்துக் கொண்டிருக்கிறது என்பதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியடையலாம். நான் ஏற்கனவே சொன்னதுபோல் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கியாகிவிட்டன. அதுபோக இன்னும் 13 லட்சம் ரூபாய் கையில் மீதி இருக்கிறது. அதைத் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தநாளையொட்டி ஆயிரம் நாள் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையின் 1,500 ஏழை எளிய மக்களுக்கு, வாழ வழியற்ற மக்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவது என்றும் அவர்கள் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தந்து வருவார்களேயானால் ஆயிரம் நாட்களில் அந்த சைக்கிள் ரிக்ஷா அவர்களுக்கு உரிமையுடையதாக ஆகிவிடும் என்றும் அந்த வகையில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு விரைவில் வெளியிடப்பட இருக்கிறது.

மணிமுத்தார்—அம்பாசமுத்திரம் பேருந்துப்பணி.

* 489 வினா—திரு.ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—